# கவிஞர் வைரமுத்து கவிதைகளில் விளிம்புநிலை மகளிர்

**ஜா.க.சனுஜா**
முனைவர்பட்ட ஆய்வு மாணவி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

**முனைவர் ம.வின்சென்ட்**
நெறியாளர், புனித யூதா கல்லூரி
தூத்தூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

மனிதனின் பொருளியல் தேவைகள் நிறைவு செய்யப்படும்போதுதான் அவன் கல்வி, கலாச்சாரங்களில் வளர முடியும். அனைத்து மாந்தரும் அவ்விதம் வளரும்போதுதான் புதிய மானுடம் உருவாகும். ஆனால் பொருள்வளம் அனைவருக்கும் சீராக எட்டவில்லை. ஒருபுறம் செல்வச்செழிப்பும் மறுபுறம் வறுமையின் கோரக்காட்சிகளுமே சமூகத்தை ஆக்கிரமித்துள்ளன. சமூகத்தின் ஆணிவேரான மகளிர் வாழ்வோ விளிம்பில் நின்று ஊசலாடுகிறது.

## சமுதாய மாற்றம்

சமுதாய மாற்றம் நிகழ்ந்து பொருளாதார அடித்தளம் மாற்றியமைக்கப்பட்டால் மட்டுமே அனைத்துப்பெண்களும் கல்வியும் வேலைவாய்ப்பும் பெறமுடியும். அப்போதுதான் எல்லாப் பெண்களும் பொருளாதாரப்பாதுகாப்பினை அடைய முடியும். பெண்கள் பொருளாதாரப் பாதுகாப்பினை அடைந்துவிட்டால் அவர்கள் ஆடவரைச் சார்ந்து நிற்கும்நிலை அகன்று இணைந்து வாழும்நிலை உருவாகும்.

## மகளிர்நிலை

மகளிர், சமூகத்தில் இரண்டாம்தரக் குடியாகவே பார்க்கப்படுகின்றனர். நாகரிக வளர்ச்சியின் பேரால் நடையுடைகளில் மாற்றம் ஏற்பட்டாலும், பெண்சார்ந்த மதிப்பீடுகளில் எந்த மாற்றமும் இல்லை. சமூகத்தின் விளிம்புநிலையில் நிற்கின்ற மகளிர் துயரத்தை சொற்களில் அடக்கிட இயலாது.

## உழைக்கும் பெண்கள்

வறுமையில் வாடும் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் ஏதேனும் ஒரு தொழில் செய்து தம் வாழ்வுக்கு வழி காண முயலுவர். ஆனால், இப்படி உழைக்கும் பெண்களின் வாழ்க்கை அவலம் மிகுந்ததாகவே இருந்து வருகிறது. காலை முதல் மாலை வரை கடின உழைப்பில் ஈடுபட்டாலும், வறுமைநிலையை விட்டு அவர்களால் வெளிவர முடிவதில்லை.

இப்படி, விறகு வெட்டி விற்று தம் வயிற்றைக் கழுவும் ஏழைப்பெண் ஒருத்தியின் அவலம் வைரமுத்து கவிதையில் பின்வருமாறு இடம் பெறுகிறது.

**"கேட்ட வெலைக்கு வித்துக்**
**கேழ்வரகு வாங்கிக்கிட்டு**
**முந்தாநாள் கத்தரிக்கா**
**முந்தியில ஏந்திக்கிட்டு**
**குடிசைக்கு நான் போனாக்**
**குடிதண்ணீர் இருக்காது**
**என்வீட்டு அடுப்பெரிக்க**
**எனக்கு விறகிருக்காது"** **(இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல, பக். 23)**

விறகுக்காரியின் அவலத்தை விளக்கும் கவிதை, உழைக்கின்ற எண்ணற்ற பெண்களின் துயர-வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவதாய் உள்ளது.

**தன்னிறைவு பெறவியலா உழைப்பு**

பொருளாதாரத் தன்னிறைவே பெண்ணுக்கு உறுதியையும், பாதுகாப்பையும், முடிவெடுக்குந் திறனையும் கொடுக்கிறது. ஆனால், உழைத்தும் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்ய இயலாப் பெண்களின் வாழ்வு நிலை மிகவும் துயரமானது.

தாய் ஒருத்தி மகளுக்காக, வருசமெல்லாம் உழைத்தும் முக்கால் பவுன்கூட வாங்க முடியாத வறுமையின் விளிம்புநிலையில் நிற்கின்ற தாயாக வைரமுத்து காட்டுகின்ற வரிகள் துயரம் மிகுந்தவை.

**"காதுக்குக் கம்மலும்**
**கழுத்துக்குச் சங்கிலியும்**
**வாங்கித் தரணுமின்னு**
**வருசமெல்லாம் தவமிருந்தும்**
**முக்கால் பவுனுக்கே**
**முந்நூறு குறையுதடி"** **(இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல, பக். 170)**

என்ற பாடல் வரிகள் சமுதாயத்தின் ஏழ்மைநிலையில் உழலுகின்ற ஏழைத்தாயின் ஆதங்கத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது.

**உறைவிடமின்றித் தவிக்கும் மகளிர்**

மக்களின் உழைப்பையும் உடைமைகளையும் சுரண்டியே அரசியல் தலைவர்கள் வளமான வாழ்வு வாழ்கின்றனர். உறைவிடமின்றித் தவிக்கும் குடும்பங்கள் ஏராளம். குடியிருக்க வீடுகட்ட சொந்த நிலம்கூட இல்லாமல் வாழ்கின்றவர் எண்ணிலடங்கார்.

புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்ட தனது வீடு அரசால் இடிக்கப்படுவதைக் கண்டு இடிந்து புலம்புகிறாள் ஏழைத்தாய். இந்த அவலத்தை,

**"நான் பட்டபாடு**
**நாய் படுமா? பேய் படுமா?**
**கடையும் தயிர்படுமா?**
**காஞ்சீவரம் தறிபடுமா?**
**முன்சுவரு எழுப்பத்தான்**
**மூக்குத்தி அடகுவச்சேன்**
**பித்தாளக் கொடம் வித்துப்**
**பின்சுவரு கட்டிவச்சேன்**
**கதவு மரம் வாங்கக்**
**காசில்ல ராசாவே**
**கோணிக்கதவு செஞ்சு**
**கோட்டைக்கு மாட்டிவிட்டேன்** **(வைரமுத்து கவிதைகள், பக்.650)**

என்ற பாடல் மூலம் கவிஞர் காட்டுகின்றார்.

**துன்பவாழ்வுநிலையில் பெண்கள்**

பெண்கள் சம உரிமையுடன் வளமாக வாழ்வதே, வீட்டின் வளர்ச்சிக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் உகந்தது. ஆனால் பெண்கள் மன, உடலளவில் குடும்பங்களில் ஒடுக்கப்படும் அவலநிலையே காணப்படுகிறது. உலக வரலாற்றைப் பார்வையிடும்போது உழைக்கும் மக்களின் வாழ்க்கை அவலம் மிகுந்ததாகவே இருந்து வருகிறது.

பெண்கள் ஓய்வின்றி உழைப்பவர்கள். ஆனால் ஊதியம்பெற இயலாதவர்கள். இப்படி பெண் ஒருத்தியின் துயரத்தினை கவிஞர் வைரமுத்து,

**"நானும் பெண் தான்**
**விழித்த நாள் முதலாய்**
**வெறுங்கால்களோடு**
**இந்தச்**
**சுடுபாலையில்**
**சுமையோடு ஓடியவள்"** **(எல்லா நதியிலும் என் ஓடம், பக். 48)**

என்ற வரிகளின் மூலம் நம் மனக்கண்முன் நிறுத்துகிறார்.

**தாமதமே வாழ்க்கையாதல்**

பணிக்குச்செல்கின்ற பெண்கள்படும் இன்னல்கள் அளவிட இயலாதவை. வீட்டிலும் அலுவலகத்திலும் தொடர்ந்து பணி செய்வதால், பலவித துன்பங்களுக்கு ஆளாகின்றனர். பல்வேறு கட்டங்களாக பல்வேறு துயரநிலைகளைத் தாண்டியே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்படி பணிக்குச் செல்லுகின்ற ஒரு பெண்ணின் அவலத்தை,

**"பேருந்து பட்டையில்**
**தூக்கிட்டுத் தொங்கியதில்**
**வலக்கைக்கு வலுவில்லை**
**சொல்கிறேன் எழுதும்**
**ஒன்று**
**கூந்தல் முடிந்து**
**குளிக்கப் போனேனா**
**தண்ணீர் தாமதம்**
**இரண்டு**
**தண்ணீரோடு**
**சம்மந்தப்பட்டதால்**
**பாலும் தாமதம்**
**--------------------"** **(கொடிமரத்தின் வேர்கள், பக். 20)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அப்பட்டமாக்குகிறார்.

**ஏழ்மைநிலையில் மகளிர்**

உடுத்திக்கொள்ளக்கூட உடையற்ற ஏழ்மைநிலையில் வாழ்கின்ற பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். மானம் மறைக்கவும் இயலாமற் போகுமளவிற்கு ஏழ்மை, பெண்களைப் பாடாய்ப்படுத்துகின்றது.
கவிஞர் வைரமுத்து,

**"என் கிராமத்துச் சகோதரி**
**ஒரு கிழிந்த பாவாடைக்காரி**
**கேட்கிறாள்**
**இந்த வானமும் ஏன்**
**என்னைப் போல்**
**ஒட்டுப்போட்டு ஆடை**
**உடுத்துகிறது"** **(வைரமுத்து கவிதைகள், பக். 37)**

என்ற பாடலில், கிராமத்து சகோதரியாக மாறி வினா தொடுக்கிறார். உடுத்துகின்ற ஆடையில் ஏராளமான கிழிசல்கள், இதை வானத்துடன் ஒப்பிட்டு வருத்தமடைகிறார்.

**முடிவுரை**

வாழ்வியல் போராட்டத்தில் பொருளாதாரச் சுமையுடன் போரிட்டு முன்னேறத் துடிக்கின்ற மகளிர்வாழ்வு துயரம் மிகுந்தது. விளிம்புநிலை மகளிர்வாழ்வு உயர சமூகம் உந்துசக்தியாய் செயல்பட மறுக்கும்போது, செய்வதறியாது தடுமாறிப் போகின்றனர். வல்லரசாய் மாறிட போட்டி-போடும் உலகம் இத்தகு சமூகஅவலங்களைக் கண்டுகொள்வதில்லை. அடிமட்ட மக்களின்-மகளிரின் வாழ்வுநிலை வளம் பெற்றால், உலகமே தன்னிறைவு பெற்றுவிடும்.

**பார்வை நூற்கள்**

1. ஜேசுராஜ் சி., புதுக்கவிதைகளில் புதிய மானுடச் சிந்தனைகள், (1999)
2. ஜோதிமணி மு., உமாமகேஸ்வரி க., இலக்கிய வீதி, (2009)
3. இராசேந்திரசோழன், கருத்தியல் மதம், சாதி, பெண், (2001)
4. பரமேசுவரி தி., சமூகம் வலைத்தளம் பெண், (2014)
5. வைரமுத்து., கொடிமரத்தின் வேர்கள் (1984)
6. வைரமுத்து., இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல, (1991)
7. வைரமுத்து., வைரமுத்து கவிதைகள், (2777000)
8. வைரமுத்து, எல்லா நதியிலும் என் ஓடம் (2007)